இதழ்-81

01.03.2025

# பல்சுவை மின்னிதழ்



8 மார்ச் உலக மகளிர் தின நல்வாழ்த்துகள்

## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**வடிவமைப்பாளர்**
ச. மதுஷா
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்தவை...

03 நீரின்றி அமையாது உலகு
06 தாய்மைகள் போற்றும் தெய்வத் தாய்மை
12 சிவபூமி திருக்குறள் வளாகம் திறப்பு விழா
14 அருமருந்து ஒன்றை சுவையூட்டி என்று எண்ணி விட்டீர்களா?
17 பறிபோகும் யானைகளின் உயிர்கள்
19 தொழில் முயற்சியாளர்கள் ஏன் குறைவாக உள்ளார்கள்?
20 வெற்றியாளர்கள் விபரம்
23 வானொலி தினம் உருவான கதை
27 நீண்ட வரலாறு கொண்ட தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை
34 பாடசாலை மாணவர்களுக்கு ஆளுமை விருத்தி மேம்பாட்டு உத்திகள்
40 அவுஸ்திரேலியாவை வெள்ளையடித்த இலங்கை அணியின் இளம் சிங்கங்கள்

**வாசகர்கள் அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள்**



# நீரின்றி அமையாது உலகு

ஆசிரியர் பதிவு

நீர் இல்லாமல் இந்த உலகில் வாழ முடியாது. இன்றைய காலகட்டத்தில் மழை குறைவதும், வறட்சி நீடிப்பதுமான நிலை அவ்வப்போது காணப்படுகிறது. எனவே, நீர்வளத்தின் அருமையையும், அதை திறம்பட சேமித்து பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் உணர்வது அவசியமாகிறது. திருவள்ளுவர் தனது திருக்குறளில் *'நீரின்றி அமையாது உலகு'* எனக் குறிப்பிடுவதன் மூலம் நீரின் அத்தியாவசியத்தைக் கூறியுள்ளார். திருக்குறளில் நீரினை வான்நீர், நில நீர் என்று இரு பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளார். வள்ளுவர் உலக உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்கு பருவம் தவறாமல் பெய்யும் மழை அடிப்படை என்பதால் மழையை அமிர்தமாக போற்றுகின்றார்.

மேலும்
*'துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித்*
*துப்பார்க்குத் துப்பாய தூவும் மழை'*

என்று குறளின் வாயிலாக உலகில் உள்ள அனைத்து உயிர்களும் உணவினை விளைவிக்க பயன்படுவது மட்டுமின்றி, தானும் உணவாக மாறும் தன்மை நீருக்கு மட்டுமே உண்டானதாகும் என்கிறார். உயிர்களின் வாழ்வாதாரமே தண்ணீர் என்பதால், அதனை "திரவத் தங்கம்" என்று சிறப்பிக்கின்றனர்.

தண்ணீர் மூன்று நிலைகளில் காணப்படுகிறது. பனிக்கட்டியாகத் திண்ம நிலையிலும், நீராகத் திரவ நிலையிலும், நீராவியாகவோ நீர்கோவையாகவோ வாயுநிலையிலும் உள்ளது. நீர் சுவையற்றது,



மணமற்றது, உருமற்றது என்பதால், அது சார்ந்திருக்கும் பொருட்களின் வடிவத்தைப் பெறுகிறது. உலகின் 71% பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது, ஆனால் இதில் 3% மட்டுமே நன்னீர் ஆகும். அதில் 2% பனிக்கட்டியாக உள்ளதால், மக்களுக்கு கிடைக்கக்கூடியது வெறும் 1% மட்டுமே. இந்த மிகச்சிறிய அளவிலான நீரே உலக மக்கள் வாழ்வுக்கு அவசியமானதாகும்.

மனித உடலில் 70% நீர் உள்ளது. நீர் இல்லையெனில் உடலில் உள்ள செல்கள் அழிந்து, மனிதன் உயிரிழக்க நேரிடும். தேவையான அளவு தண்ணீர் குடிப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கலாம். நீர் பலவிதமான பொருட்களை கரைத்து, அவற்றிற்கு வெவ்வேறு சுவைகளையும் வாசனைகளையும் வழங்குகிறது. வேதிப்பொருட்களின் கரைப் பானாகவும், தொழிற்சாலைகளில் குளிர்விப்பானாகவும், சிறந்த கடத்தியாகவும் நீர் பயன்படுகிறது. வர்த்தக ரீதியாகவும் நீர் மிக முக்கியமான பொருளாக மாறியுள்ளது.




மழைநீர் என்பதே இயற்கையின் வரமாகும். காடுகளே மழைக்கு காரணமாக இருப்பதால், அவற்றை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். மழைநீரே அருவியாக, நதியாக உருகி ஓடி, நம் நீர்தேவையை பூர்த்தி செய்கிறது. எனவே, காடுகளையும் மலைவளங்களையும் பேணி காக்க வேண்டும். வீணாக ஓடி கடலில் கலக்கும் நீரை புதிய நீர்நிலைகளை உருவாக்கி தேக்கி வைப்பதன் மூலம் நீர்வளம் பெருக்கலாம். மழைநீர் சேகரிப்பு முறைகளை மேம்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர் வளத்தை உயர்த்தலாம்.

*'தாயை பழித்தாலும், தண்ணீரை பழிக்கக் கூடாது'*
என்ற பழமொழி நீரின் மதிப்பை உணர்த்துகிறது. பழந்தமிழர்கள் நீரை உயர்ந்த பண்பாடாகக் கருதினர். சிறந்த நீர்மேலாண்மை முறைகளை பின்பற்றினர். 10ம் நூற்றாண்டிலேயே மன்னர் ராஜராஜன் மழைநீர் சேகரிப்பு திட்டங்களை செயல்படுத்தினார். ஆனால், சமீப காலங்களில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளன. அவற்றை அரசு அகற்றினாலும், மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது. நீர் வற்றும் போது ஏரிகள், குளங்கள் குப்பைகளால் நிரம்பி, தரை நிலமாக மாறுகின்றன. பின்னர், அவற்றில் வீடுகள் கட்டப்பட்டு குடியேறப்படுகின்றன.

இவ்வாறு நீர்நிலைகள் அழிக்கப்படுவதால், நீர் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. நீர்வளங்களை பாதுகாக்க

முடியாவிட்டால், எதிர்காலத்தில் பெரும் நீர் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். சாலையோர குடிநீர் குழாயில் நீர் வீணாக ஓடினால், அதை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதையில் குடிநீர் குழாய் உடைந்து நீர் பெருக்கெடுத்து ஓடினால், அதை கண்டும் காணாமல் விடாமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

தண்ணீர் பயம் தவிர்.
சொட்டச் சொட்ட நனை.
கிட்டத்தட்டக் குளி.
நீரின் பெருமை
நிறையப்பேர் அறியவில்லை.
காதலி பெருமை பிரிவில்.
மனைவி பெருமை மறைவில்.
தண்ணீரின் பெருமை
பஞ்சத்தில். அல்லது
வெள்ளத்தில்.

நீ உணவில்லாமல் ஒருமாதம்
வாழலாம். நீரில்லாமல்
ஒருவாரம் வாழமுடியாது.
தண்ணீர்தான் உயிர். இந்தக்
கடல் அந்த உயிரின் தாய்.

கடலில் பிறந்த முதல் உயிர்
தண்ணீரில்தானே சுவாசித்திருக்க
முடியும். அந்த மரபுரிமையின்
தொடர்ச்சிதான் இன்றும்
கர்ப்பத்தில் வளரும் சிசு
தண்ணீர்க் குடத்தில்
சுவாசிக்கிறது.

*–வைரமுத்து*

நீரை பாதுகாக்க முடியாததால், இன்று நாம் அதை பணம் கொடுத்து வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். நீரின் மதிப்பை உணர்த்துவதற்காக உலக தண்ணீர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இது உலகளவில் நீரின் முக்கியத்துவத்தையும், நீர் மேலாண்மையின் அவசியத்தையும் மக்கள் மனதில் பதிக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மக்களுக்கிடையே நீர் சேமிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 1993ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த நாளை உலக தண்ணீர் தினமாக அறிவித்தது. அந்த நாளில் மட்டுமல்லாமல், நாள்தோறும் நீரை பாதுகாக்க உறுதிப் பட வேண்டும். நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் பொறுப்பு உணர்ந்து செயல்பட்டால் மட்டுமே, வருங்கால சந்ததியினருக்கு நீர் தட்டுப்பாடின்றி கிடைக்கும். எமக்கு எம் முன்னோர் தந்த அருஞ் செல்வத்தை எம் அடுத்த சந்ததிக்கு கொடுக்காவிட்டால் அது மகாபாவம் ஆகிவிடும். இந்த பூமிப் பந்து உயிர்ப்போடு சுற்ற சுத்தமான தண்ணீர் இன்றியமையாதது.

***'விசும்பின் துளி வீழின் அல்லால் மற்றாங்கே
பசும் புல் தலை காண்பு அரிது'***

# தாய்மைகள் போற்றும் தெய்வத் தாய்மை




செந்தமிழையும் சிவநெறியையும் தம் இரு கண்களென கருதி வாழும் சார்பினர் ஈழத் தமிழ் மக்கள். திருமந்திரம் தந்த குரு திருமூலரும் ஆதலினாலே இலங்கை மண்ணை “சிவபூமி” என்று சிறப்பித்துச் சென்றார்.

சிவபூமியில் தோன்றி மறைந்த எத்தனையோ மாந்தார்களால் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றப்பட்ட தொண்டுகள் நினைக்கப்பட வேண்டியவை.

“அறிஞர்களால் தான் ஒரு நாடு பெருமை அடைகிறது. சோக்கிறற்றீஸ் தோன்றியதால் கிரேக்க நாடு நினைவிலிருக்கிறது. ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்கா பெருமை அடைகிறது. சுவாமி விவேகானந்தரால் பாரத நாடு போற்றப்படுகிறது. அதே போல் நாவலர் பெருமானால் யாழ்ப்பாணம் பெருமை அடைகிறது” என்று கூறுகிறார் செந்தமிழ்ச்செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள்.

நாவலர் பெருமான் காட்டிய சைவ நெறிக் கோட்பாடுகளை அடுத்த நூற்றாண்டில் நடைமுறைப்படுத்தி வந்து பெருமையும் அப்பாக்குட்டி தங்கம்மா அவர்களையுமே சேரும்.

சைவ உலகம் போற்றும் மங்கையர்களாய் ஓர் அம்மையாரையும், ஓர் அரசியாரையும், ஒரு தமக்கையாரையும் பெரியபுராணத்தில் காணலாம். காரைக்காலம்மையாரும், மங்கையற் கரசியாரும், திலகவதியாரும் ஆற்றிய மகத்தான சிவப்பணிகளிற்கு ஈடாக சிவப்பூமியில் சைவத்தமிழ் வளர்த்த தீரராக சிவத்தமிழ்ச்செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள் போற்றப்படுகிறார்.

ஆசிரியராக தன் பணியை தொடங்கிய அம்மையார் அவர்கள் சொற்பொழிவால் தம் மக்கள் மனங்களில் சமயத்தை விதைக்க ஆரம்பித்தார்.

சைவசித்தாந்தத்தில் பாண்டித்தியம் பெற்ற இவர் சைவ மாநாடுகளிலும் சமய விழாக்களிலும் ஆற்றிய பேருரைகள் இலங்கை மட்டுமல்லாது தமிழர் வாழும் தேசமெல்லாம் ஒலித்து பெரும் பாராட்டை பெற்றன.

“யாழ்ப்பாணத்து செந்தமிழ்ச்செல்வி அப்பாக்குட்டி தங்கம்மாவின் சொற்பொழிவுகள் ஏன் தமிழ்நாட்டில் எடுபடுகின்றன?” என்கிற கேள்விக்கு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இவ்வாறு விளக்கம் கூறினார் “ முதலாவது பேச்சின் பொருளை ஒழுங்குபடுத்திப் பேசுதல், இரண்டாவது கால நேரத்தை உணர்ந்து கட்டுப்பட்டுப் பேசுதல், மூன்றாவது யாழ்ப்பாணத்தமிழின் தனிச் சிறப்பு, நான்காவது ஓரெழுத்தையும் சிதைக்காது விழுங்காது உச்சரித்தல்”.

**‘தோன்றின் புகழொடு தோன்றுக’ வாசகப்படி. தோன்றிய இடமெல்லாம் சைவப்புகழ் பாடி. தன் புகழை செதுக்கிச் சென்றார் அம்மையார். ஏறக்குறைய 5000 தனிச் சொற்பொழிவுகளை நடத்திய தவச் செல்விக்கு ஆலயங்களும் மன்றங்களும் ஆதினங்களும் வழங்கிய பட்டங்களும் புகழாரங்களுமே இதற்குச் சான்று.**
1966ஆம் ஆண்டு மதுரை ஆதினம் “செஞ்சொற் செம்மணி” என்ற பட்டத்தையும், 1970 ம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயில் ஆதீனம் “சிவத்தமிழ்ச்செல்வி” என்ற பட்டத்தையும், 1971ம் ஆண்டு காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் “சித்தாந்த ஞானாகரம்” என்ற பட்டத்தையும்,



1972ம் ஆண்டு மலேசியா சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் "திருவாசகக் கொண்டல்" என்ற பட்டத்தையும், 1973ம் ஆண்டு வண்ணை வைத்தீஸ்வரம் ஆதீனம் "திருமுறைச் செல்வி" என்ற பட்டத்தையும், 1974ம் ஆண்டு தெல்லுப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் "துர்க்கா துரந்தரி" என்ற பட்டத்தையும் ,1974ம் ஆண்டு திருக்கேதீஸ்வர ஆதீனம் "சிவமயச் செல்வி என்ற பட்டத்தையும், 1983ம் ஆண்டு இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் ஆதீனம் "திருமொழி அரசு" என்ற பட்டத்தையும் அளித்து கௌரவித்தன.

ஈழநாட்டின் புகழ்பூத்த பழமை வாய்ந்த ஓராலயம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம். ஆரம்பத்தில் தர்மகர்த்தாக்களின் பொறுப்பில் இருந்த இந்த ஆலயத்தில் ஒரு சபை உருவாக்கப்பட்டது. அச்சபையின் முயற்சியால் 1948ம் ஆண்டு தொடக்கம் சிறிது சிறிதாகத் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி 1958ம் ஆண்டு பாலத்தாபனம் செய்யப்பட்டது. எனினும் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை. 1963ம் ஆண்டு புதிதாக ஒரு திருப்பணிச்சபை ஆலய அபிவிருத்திக்காக அமைக்கப்பட்டது. இக்காலத்திலேயே செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்களும் ஓர் உறுப்பினராக சேர்க்கப்பட்டார். சபையுடன் சேர்ந்து உற்சாகமாக பணிபுரிந்து குடமுழுக்கு நடைபெறுவதற்கு உதவிய காரணத்தால் குடமுழுக்கு விழா நிறைவு பெற்றதுடன் நிர்வாக சபை ஒன்றை கோயிற் பரிபாலனத்திற்காக நிறுவி அதன் பொருளாளராக அம்மையாரும் தர்மகர்த்தா சபையால் நியமிக்கப்பட்டார்.



தொடர்ந்து பத்து ஆண்டுகள் அம்மையார் பொருளாளராக இருந்த காலத்தில் கோயிலில் கொடிமரம் நாட்டி மகோற்சவம் நடைபெற்றது. 25 ஆண்டுகளிற்கு மேல் மூலைமுடக்கெல்லாம் சொற் பொழிவாற்றியதால் ஆயத்தின் பெருமையும் உலகெங்கும் அறியப்பட்டது. வெளிநாட்டுப் பிரமுகர்கள் ஆலயத்திற்கு வந்து அம்மையார் ஊடாக மனமுவந்து பல அன்பளிப்புகளை வழங்கிச்சென்றனர். இதனால் திருப்பணி வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்று வந்தன.

தர்மகர்த்தா சபையால் 1977ம் ஆண்டு ஆலய நிர்வாகசபைக் குழுவின் தலைவராக சிவத்தமிழ்ச்செல்வி நியமிக்கப்பட்டார். இவர் தலைவரான

காலமே ஆலயத்தின் பொற்காலம் உருவாகத் தொடங்கியது. 1978ம் ஆண்டே அம்பாளிற்கு சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. கோயில் முகப்பு இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. இன்னும் பல பல மண்டபங்களும், சிற்ப வேலைகளும், தீர்த்தக்கேணிகளும் என ஆலய பேரழகை வளர்த்துக் கொண்டே சென்றார் அம்மையார்.

இறைபற்று ஒன்றையே தன் ஊதியமாக கொண்டிருந்த அம்மையார் ஆற்றிய மிக முக்கிய பணிகளில் ஒன்று துர்க்காபுரம் மகளிர் இல்லம். சமூகத்தொண்டே சமயத்தொண்டு என்பதை நினைந்து தன் தூய அறிவினை தொண்டாக மணம் வீசச் செய்தார். 1981ம் ஆண்டு ஆலயத்தில் சென்னை சைவசிந்தாந்த சமாசம் நடாத்திய பவள விழாவின் போது மகளிர் இல்லம் ஒன்று அமைத்து ஆதரவற்ற இளம் பெண் குழந்தைகளை பேணிப்பராமரிக்க வேண்டும் என்ற சிந்தனை அம்மையாரின் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. சிந்தனை உடன் செயலாக்கப்பட்டது. 1982-02-03 இல் மகளிர் இல்லம் தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 5 தொடக்கம் 12 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுடன் ஆயத்தமானது. மேலும் நாற்பது வயதிற்கு மேற்பட்ட திக்கற்ற , விவாகமாகாத அல்லது விதவைப் பெண்களிற்கும் நல்வாழ்வு அளிக்கும் சீரிய நோக்குடன் உருப்பெற்றது. அவர்களிற்கு உணவு, உடை, உறையுள் அளித்து சைவ நற்பணிகளில் பயிற்சி பெறவும் வாய்ப்பளிக்கப்பட்டது.

“தாய் ஒருத்தி ஒரு பொருளை தான் பெறும் போது அடையும் மகிழ்ச்சியை விட தன் பிள்ளை பெறும் போது அடையும் மகிழ்ச்சி அளப்பரியது. அதைப்போல் நாம் இறைவனுக்குக் கொடுக்க நினைப்பதையெல்லாம் இறைவன் உறையும் இதயங்களை கொண்டிருக்கும் ஏழைகளிற்கு வழங்கினால் அஃது இறைவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும்.” என்று கூறி ஆலய சமூகத்தை சமூகத் தொண்டெனும் நல்வழிக்கு அழைத்து வந்தார் அம்மையார்.

ஓர் ஆலயம் எப்படியிருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டினார் அம்மையார். துர்க்கை அன்னை வசிப்பதற்கு இதை விட அழகிய இடம் வேறு எதுவுமில்லை என்பதை நிரூபித்திருக்கிறார் அம்மையார்.

அதுவும் எப்படியான காலப்பகுதியில்? அன்றைய வருடங்களில் எம் மண்ணின் அவலங்கள் யாவரும் அறிந்ததே. சூழ்நிலைகள் சரியில்லை. எம்மால் செயற்படமுடியாது. செயற்பட்டாலும் வேறு அர்த்தங்கள் கூறப்படும் என்று சொல்லிச் சமுதாய முன்னோடிகள் பலர் தமது பணியில் இருந்து விலகுகின்ற வேளையில் இச் சூழ்நிலையில்தான் நாம் செயற்பட வேண்டும். செயற்பட முடியும். என்று நிரூபித்து “செயற்கரிய செய்வார் பெரியர்” என ஏனையோரிடமிருந்து உயர்ந்து நிற்கிறார் அம்மையார்.

அதைச் செய்வதற்கு தேவையான தைரியமும் உறுதியும் அம்மையாரிடமும்

வலுப்பெற்றிருந்தது. அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவம். ஆலயத்தின் சொத்துக்களை அபகரிக்க ஒரு குழுவினர் முற்றுகையிட்டு ஆலயக்குருமார் தொண்டர்களை பணயம் வைத்தனர்.

ஒரு வஞ்சகன் அம்மாவின் நெஞ்சில் துவக்கினை வைத்து மிரட்டினான். அஞ்சா நெஞ்சம் கொண்ட அம்மையார் தயவோடும் துணிவோடும் “தம்பி அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் என் ஆத்மா பிரிவு இந்த ஆலயத்தில் நிகழ்வதை நான் விரும்புகிறேன்” என்றார். வஞ்சகர் நெஞ்சம் இளகி கிடைத்த நகை பொருட்களோடு தலை மறைவாகி விட்டனர். அம்பாளிடம் அம்மா கதறியழுது மன்றாடினார். அம்மையாரின் வேண்டுதலை துர்க்கையம்மன் செவி சாய்க்காமல் இருக்க முடியுமா? அதிசயம் நிகழ்ந்தது! சில நாள்களின் பின் ஆலய வீதியில் அம்பாளின் நகைகளை எல்லாம் குறைவின்றி மீட்டெடுத்தனர்.

அம்மையார் மேடையில் அடிக்கடி சொல்லும் ஒரு பாரதி பாடல்
“உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்- தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வைர நெஞ்சமுடைய நெஞ்சு வேண்டும்- இது வாழும் முறைமையடி பாப்பா.”

அம்மையார் இப்பாடலை எடுத்து மட்டும் காட்ட வில்லை. வாழ்ந்து காட்டினார்.

பெண்ணியம் என்பதை பேசுபொருளிலிருந்து செயல் வடிவில் செய்து காட்டிய அம்மையாரே பெண்ணின் சர்வவல்லமைக்கு சாட்சியாய் நிற்கிறார். மகளிர் தினம் கொண்டாடப்படும் நாளில் மகளிர் மனோதிடம் பெருக ஒவ்வோர் மனத்திலும் நினைக்கப்பட வேண்டியவர் சிவத்தமிழ்ச்செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள்.

அந்த வகையிலே அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக அம்மையாரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலயத்திலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன்



கோவிலை வந்தடைந்தது. வழியெங்கும் பெருமளவு மக்கள் பூரண கும்பம் வைத்து, அன்னையின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, வீதிகளை தோரணங்களால் அலங்கரித்து, அன்னையின் சொற்பொழிவுகளை ஒலிபெருக்கிகளில் போட்டு ஈழத்தமிழ் தேசத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த தெய்வத்தாயை வரவேற்று மரியாதை செய்தார்கள். இடைக்கிடையே வானத்து தேவர்களும் மழையாக தங்கள் மலர் வணக்கங்களை செலுத்தினார்கள். கால்நடையாக பெருமளவு மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். அன்னை ஆற்றிய சேவையே அன்னை மறைந்தும் ஈழத்திருமண் நன்றியோடு கொண்டாடியதை வரலாறு என்றும் நினைவில் வைத்திருக்கும்.




அந்த ஊர்வலம் நிறைவடைந்த பின் தனியாக நின்ற அந்த ஊர்தியில் அம்மையாரின் திருவுருவப்படத்தை பலரும் வணங்கிச் சென்றனர். அதில் முத்தாப்பாய் ஒரு மூத்த பெண்மணி இயல்பாய் இரு கைகளையும் சிரம் மேல் கூப்பி மெய்யன்புடன் வழிபட்ட காட்சி கமராவின் கண்களுக்குள் அகப்பட்டது. அடடே... இதுவல்லவோ காட்சி...! தாய்மை மதிக்கும் தாய்மை..! பல பெண்களுக்கு அம்மையார் வாழ்க்கை தந்தவர், வழி காட்டியவர். பெண்களின் சுதந்திரம் எதுவென்று பெண்களுக்கும் சேர்த்தே பாடம் புகட்டியவர்.


பெண் சுதந்திரம் என்பது ஆண்களோடு போட்டி போடுவது என எண்ணி பெண்கள் தினம் கொண்டாடும் மக்களுக்காய் துமி இந்த மகளீர் தினத்தில் அம்மையாரை முன்னிலைப்படுத்த விரும்புகிறது. இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் அம்மையார் நினைவாக மகளீர் தினம் கொண்டாடுவோம். அம்மையாரின் சமய சமூக பணிகளை அவரைத் தொடர்ந்து கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் பலவாறாய் செய்வது ஈழத் தமிழர்கள் செய்த தவப்பயன். அந்த தாயைப் போல பெண்களும் பொது வாழ்விலும் சமய வாழ்விலும் ஈடுபடுவதோடு பிரசங்கங்களிலும் ஈடுபட முன்வர வேண்டும். அதற்காக இந்த மகளீர் தினத்தில் சிந்திப்போம்.

**எல்லோருக்கும் அம்மையாரின் ஆசிகள் கிடைக்கப்பெறட்டும்.**

# மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகம் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது




மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகத்தின் திறப்பு விழா 2025 பிப்ரவரி 2 ஆம் தேதி கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழா, தமிழ்மொழியின் செம்மையை உலகளவில் பறைசாற்றும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது. திருக்குறளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இவ்வளாகம், கருங்கல்லில் செதுக்கப்பட்ட திருக்குறள் அடிகளுடன், ஆய்வுக் கூடங்கள், நூலகம், தியான மண்டபம், மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.




இந்த நிகழ்வில் இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி அரங்க. மகாதேவன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, தனது உரையில் தமிழ் மொழியின் பெருமையை வலியுறுத்தினார். இவருடன், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன், தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன், மற்றும் இந்திய துணைத் தூதர் (யாழ்ப்பாணம்) சாய் முரளி ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.


விழாவின் போது, தமிழ்நாட்டின் பிரபல இசைக் கலைஞர்கள் சீர்காழி





அருணா மற்றும் அகிலா சகோதரிகள் இன்னிசை நிகழ்ச்சியை வழங்கினர். ஈழத்து கலைஞர்களும் பங்கேற்று நிகழ்வை இனிமையாக்கினர். நிகழ்வின் முக்கிய அங்கமாக திருக்குறளின் பெருமையை விளக்கும் உரைகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய நற்பணி நிகழ்வுகளும் நடைபெற்றன. சிவபூமி திருக்குறள் வளாகம் தமிழின் மாபெரும் செல்வத்தை உலகளவில் பரப்பும் ஒரு மையமாக நிலைக்க வேண்டும் என்பது பலரது எதிர்பார்ப்பாகும்.







# அருமருந்து ஒன்றை சுவையூட்டி என்று எண்ணி விட்டீர்களா..?


வெந்தயம் என்பது ஒரு சாதாரண சமையல் பொருள் என்ற முறையை தாண்டி, அத்தனைக்கும் அருமருந்தாக விளங்குகிறது. இது சிறிய விதையாக இருந்தாலும், பல்வேறு உடல் நல பிரச்சனைகளுக்கு தீர்வாக பயன்படுகிறது. சிறுவயதில் அடிவயிற்று வலி ஏற்பட்டால், வெந்தயத்தை தண்ணீருடன் சேர்த்து உட்கொள்ள சொல்வதுண்டு. ஆனால், இதன் மருத்துவப் பயன்களை முழுமையாக புரிந்து கொண்டு அதை முறையாக உணவில் சேர்த்துக் கொள்வது முக்கியம்.

### சர்க்கரை நோயாளிகளுக்கு வெந்தயத்தின் பயன்

சர்க்கரை கட்டுப்பாட்டிற்கு வெந்தயம் சிறந்த ஒரு இயற்கை மருந்தாக விளங்குகிறது. தினமும் வெந்தயத்தை ஊறவைத்து, முளைக்கட்டிச் சாப்பிட்டால் இரண்டே மாதங்களில் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுக்குள் கொண்டுவர முடியும். வெந்தயத்தை வறுத்து பொடியாக்கி ஒரு தேக்கரண்டி அளவு தினமும் உட்கொள்வது பலருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது.

### வெந்தயத்தின் ஊறவைத்த மற்றும் முளைக்கட்டிய பயன்கள்

வெந்தயத்தை 6 மணி நேரம் நீரில் ஊறவைத்து, பின்னர் துணியில் கட்டி 8 மணி நேரம் வைத்தால், முளைக்கட்டியதாக மாறும். இது சாதாரண வெந்தயத்தை விட இரும்புச்சத்து, வைட்டமின்கள் மற்றும் ஆன்டி-ஆக்ஸிடென்டுகள் அதிகமாக



கொண்டிருக்கும். முளைகட்டிய வெந்தயத்தின் கசப்பு சுவை குறைந்து, உணவில் சேர்த்துக் கொள்ள எளிதாக இருக்கும். இதை இரவில் அல்லது காலை சிற்றுண்டிக்குப் பிறகு உட்கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### இதய ஆரோக்கியத்திற்கும் கொழுப்பைக் கட்டுப்படுத்தவும்

வெந்தயம் இதயத்திற்குப் பாதுகாப்பாக செயல்படுகிறது. ரத்தக் குழாய்களில் கொழுப்பு அடைப்பைத் தடுக்கவும், இரத்த ஓட்டத்தைச் சிறப்பாக வைத்திருக்கவும் இது உதவுகிறது. மேலும், அதிக உடல் எடை உள்ளவர்களுக்கு, வெந்தயம் உடல் எடையை குறைத்து, உடலை ஸ்லிம் ரூ ஃபிட்டாக மாற்றும் தன்மை கொண்டது.

### முடி உதிர்தல் மற்றும் பொடுகு நீங்கவும்

வெந்தயத்தை உணவில் சேர்த்துக் கொள்ளும் பழக்கம் முடி உதிர்தலைத் தடுக்க உதவுகிறது. மேலும், வெந்தயத்தை ஊறவைத்து அரைத்து தலைமுடிக்கு தடவினால், பொடுகு மற்றும் தலைச்சொறிகி பிரச்சனைகளைத் தீர்க்கும்.

### மாதவிடாய் கால வலியை குறைக்கவும்

பெண்கள் மாதவிடாய் காலங்களில் அடிவயிற்று வலி மற்றும் வயிற்றுக் கடுப்பால் அவதியுறும் போது, வெந்தயம் சிறந்த நிவாரணமாக செயல்படுகிறது. இந்த நாட்களில், வெந்தயத்தை முளைக்கட்டிச் சாப்பிட்டால், வலி குறையும்.

### கண் ஆரோக்கியத்திற்கும் மூல நோய்க்கும் வெந்தயம்

வெந்தயம் கண்களுக்கு குளிர்ச்சி தரும் மற்றும் கண் பார்வையை அதிகரிக்கும். மலச்சிக்கல் பிரச்சனை முதல் மூல நோய் வரை வெந்தயம் தீர்வாக செயல்படுகிறது. இதிலுள்ள நார்ச்சத்து செரிமானத்தை சீராக்க உதவுகிறது.




### மூன்று முக்கிய சத்துக்கள்

முளைக்கட்டிய வெந்தயத்தில் வைட்டமின் ஊ, இரும்புச்சத்து, மற்றும் பொட்டாசியம் போன்ற

மூன்று முக்கிய சத்துக்கள் அதிக அளவில் இருக்கின்றன. இதனால், உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை இயற்கையாகவே பெறலாம்.

### உடலின் சூட்டைக் கட்டுப்படுத்தவும்

தொடர்ந்து வெந்தயம் உட்கொள்வதால் உடல் சூடு குறையும். ஆனால், சைனஸ் பிரச்சனை உள்ளவர்கள் வெந்தயத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் வெந்தயத்தை வறுத்து பொடியாக்கி எடுத்துக் கொள்ளலாம்.

### வெந்தயத்தை உணவில் சேர்க்கும் பழக்கம்

வெந்தயத்தின் பயன்களை முழுமையாகப் பெற, தினசரி உணவில் அதை சேர்த்துக் கொள்ள வேண்டும். வெந்தயத்தை வாங்கும் பலசரக்கு சாமான் பட்டியலில் முதன்மையாக வைத்துக் கொண்டு, அதன் மகத்தான பயன்களை அனுபவிக்கலாம். உடல் ஆரோக்கியத்திற்காக இதைச் சரியாக பயன்படுத்தி, இயற்கையான நலனை அடைவோம்.

## கடல் நண்டுகளுக்கு பாலங்கள்

ஒவ்வொரு ஆண்டும் ஆஸ்திரேலியாவில், சுமார் 120 மில்லியன் கடல் நண்டுகள் காடுகளில் இருந்து கடலுக்கு இடம்பெயர்கின்றன, இனப்பெருக்கம் மற்றும் முட்டையிடும் நோக்கத்துடன். ஆனால், அவற்றின் பிரயாணப்பாதையில் ஒரு வீதியை அவைகள் கடக்க வேண்டியுள்ளது. இந்த நண்டுகளை உயிர் பிழைக்க, மற்றும் விபத்துகளை குறைக்க ஆவுஸ்திரேலிய அதிகாரிகள் அந்த நெடுஞ்சாலையின் முழு நீளத்திலும் பாலங்கள் மற்றும் சுரங்கங்களை உருவாக்கி அவைகளின் இடம்பெயர்வுக்கு உதவியுள்ளனர்





# பறிபோகும் யானைகளின் உயிர்கள்

இரயில்வே பாதைகளில் யானைகளின் உயிரிழப்பு ஒரு தொடர்ச்சியான பிரச்சினையாக உள்ளது. நேற்று இரவு மீனா கயா இரயிலுடன் மோதியதில் ஆறு யானைகள், அதில் இரண்டு கன்று உட்பட, உயிரிழந்தன. மேலும் இரண்டு யானைகள் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றன. இது மிகுந்த கவலைக்குரிய நிலைமை.

இந்தப் பகுதி யானைகள் இயல்பாக கடக்கும் இடமாகும், மேலும் எச்சரிக்கை பலகைகள் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்பதில் பல கேள்விகள் எழுகின்றன. இரயிலின் வேகம் என்ன? இயக்குநர் மது அருந்தியிருந்தாரா? இவை முழுமையாக விசாரணை செய்யப்பட வேண்டும். ஒரு மனிதன் உயிரிழந்தால் எவ்வாறு தீவிரமாக நடத்துவார்களோ, அதே நிலைப்பாடு இங்கேயும் இருக்க வேண்டும்.

கடந்த பத்து ஆண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் இரயில் மோதி உயிரிழந்துள்ளன. இது தொடரக்கூடியதல்ல. இந்த விபத்துகள் குறிப்பிட்ட பகுதிகளில் மிகவும் அதிகமாக நடைபெற்று வருகின்றன, குறிப்பாக பொலன்னறுவை மற்றும் ஹபரணாவுக்கு இடையிலான பாதைகளில். ஹபரணா-கலோயா, கலோயா-கந்தளை, கலோயா-மின்னேரியா பகுதிகள் யானைகள் அதிகமாகச் சுற்றி வருமிடங்களாகும். மின்னேரியா, கௌதுல்ல, புளட் பிளெயின்ஸ் போன்ற தேசிய பூங்காக்கள் இந்த பகுதிகளில் உள்ளன, அங்கு யானைகள் அடிக்கடி காணப்படுகின்றன.




முறையான தீர்வுகள் பற்றி அதிகம் பேசப்பட்டாலும், அவை கடைப்பிடிக்கப் படவில்லை. மின்னணு வேலி, ஒளி எச்சரிக்கை தொழில் நுட்பங்கள், கிழக்கச்சொறி மற்றும் உயர் அதிர்வெண் ஒலி நிராகரிப்பு முறைகள்,

யானைகள் கடப்பதற்கான மேம்பாலங்கள் மற்றும் தாழ்வான பாதைகள் போன்ற பல முடிவுகள் முன்மொழியப்பட்டன. ஆனால், அவை பெரும்பாலும் நடைமுறைக்கு வரவில்லை.

ஒவ்வொரு யானையின் உயிரிழப்பும் இலங்கையின் சுற்றுலா துறைக்கு பேரழிவை ஏற்படுத்துகிறது. ஒரு காட்டுயானையின் வாழ்நாள் முழுவதற்குமான மதிப்பு சுமார் 11 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய இழப்பு.




இதுபோன்ற ஒரு சம்பவம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இதே பாதையில் நடந்துள்ளது. ஆனால், இதை தடுக்க அரசு ஏன் எந்தவொருநடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது புரிய முடியாத வி'யமாக உள்ளது. இவை தொடர வேண்டிய விபத்துகள் அல்ல. இனிமேலும் இப்படியொரு உயிரிழப்பு நிகழக்கூடாது என்பதில் அரசும், பொது மக்களும் முழுமையான கவனம் செலுத்த வேண்டும்.

## உளவு மோதிரம்



இந்த மோதிரம் 1965 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் உளவுப்பிரிவான KGB னால் உருவாக்கப்பட்டது. இது ஒரு நுண்ணிய கெமராவினை மோதிரத்தின் மேல் பகுதியில் வைத்து உருவாக்கப்பட்டது. அதன் நோக்கம் மறைமுகமாக புகைப்படம் எடுப்பதாகும், இதன் மூலம் முக்கியமான நபர்களைப் பற்றிய உளவுத்தகவல்களை பெற KGB ஏஜென்ட்கள் இதைப் பயன்படுத்தினர்.



# தொழில் முயற்சியாளர்கள் ஏன் குறைவாக உள்ளார்கள்?

சீனாவின் மிகப்பெரிய பணக்காரர் ஒருவர், குரங்குகளுக்கு முன் வாழைப்பழங்களையும் பணத்தையும் வைத்தால், அவர்கள் பணத்தால் பல வாழைப்பழங்களை வாங்க முடியும் என்பதை அறியாமல், வாழைப்பழங்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று கூறினார். அதேபோல, மக்களுக்கு வேலை மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்கினால், பெரும்பாலோர் தொழில் மூலம் சம்பளம் பெறுவதைக் காட்டிலும், தொழில் தொடங்குவதால் அதிக வருமானம் பெறலாம் என்பதை அறியாமல், வேலைவாய்ப்பைத் தேர்ந்தெடுப்பார்கள்.



இது ஏழ்மையின் முக்கிய காரணங்களில் ஒன்றாகும் ஏனெனில், பலர் தொழில் வாய்ப்புகளை அடையாளம் காண பயிற்சியளிக்கப் படவில்லை. அவர்கள் பள்ளியில் அதிக நேரத்தை செலவிடுகின்றனர், ஆனால் பள்ளியில் அவர்கள் சம்பளம் பெறுவதற்கான வேலைக்கான பயிற்சியையே பெறுகின்றனர் தங்களுக்காக வேலை செய்வதற்கான பயிற்சியல்ல.

சம்பளம் வாழ்க்கையை நடத்த உதவலாம், ஆனால் லாபம் செல்வத்தை உருவாக்கும். எனவே, தொழில் வாய்ப்புகளை அடையாளம் கண்டு, தன்னம்பிக்கையுடன் முன்னேற வேண்டும்.

# வெற்றியாளர்கள் விபரம்

அபயம் அறக்கட்டளை நிதிப் பங்களிப்புடன் தூமி அமையம் சிவபூமி அமையத்துடன் இணைந்து நடத்திய மாணவர்களுக்கான போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்படும். வெற்றி பெற்றவர்களில் எமக்கு தொலைபேசி இலக்கம் வழங்கி வைக்காதவர்கள் எமது பிரதம ஆசிரியரை 0777840205 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துங்கள்.

## பிரிவு 03

### சிறுகதை

1ம் பரிசு - இ. மொ. இஸ்பாக்
கலைப் பிரிவு
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

2ம் பரிசு - தயாளன் சந்திசை,
கலைப் பிரிவு
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

3ம் பரிசு -
யதீஸ்கா செல்வராசா
கலைப் பிரிவு
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

### கவிதை

1ம் பரிசு - கிருத்திகா சுவேந்திரன்
கலைப் பிரிவு
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

2ம் பரிசு -சாந்தகுமார் நிலாவினி
கலைப் பிரிவு
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

3ம் பரிசு -பாத்திமா ஹன்சா
திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு

ஆறுதல் பரிசுகள்
ஜெப கீர்த்தனா மனோகரன்
உளவியல் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

சௌந்தரராஜ் பிரியஷகி
மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி

பேர்க்மன்ஸ் நிறைசுடர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## பிரிவு 02

### சிறுகதை

1ம் பரிசு -
பி. ஜோயலா
தரம் 13
யா/நெல்லியடி மத்திய கல்லூரி

2ம் பரிசு -
கோ. பதுமிதன்
தரம் 10
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

3ம் பரிசு -
அ. லோறிஷா
தரம் 10
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

ஆறுதல் பரிசுகள்
சு. சுவேதா
தரம் 13
வ.்.விபுலானந்தா கல்லூரி

கு.நிசாந்தன்
தரம் 10
யா.்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சு.ததுர்ஷிகா
தரம் 10
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

## கவிதை

1ம் பரிசு -
கேசவன் பவித்திரா
தரம் 10
கண்டி கலைவாணி தமிழ் வித்தியாலயம்

2ம் பரிசு -
திருட்டாயினி ஜெயக்குமார்
தரம் 13
யா.். யூனியன் கல்லூரி

3ம் பரிசு -
இ.அனிக்சா
தரம் 10
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

ஆறுதல் பரிசுகள்
கி. கிருத்திகா
தரம் 11
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

ர. ஹீஞ்சகன்
தரம் 11
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

கு. தாமிரன்
தரம் 12
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

### பிரிவு 01

## சிறுகதை

1ம் பரிசு -
சு. லிதுஷியானா
தரம் 09
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

2ம் பரிசு -
கா. டிலுஷியா
தரம் 08
கலஹா இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி

3ம் பரிசு -
வி. சதுஸ்ரிகா
தரம் 08
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

ஆறுதல் பரிசுகள்
பு. கியூரிக்கா
தரம் 08
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

ச. கிஷோனியா
தரம் 06
ம.். புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரி

நா. அருண்
தரம் 08
யா.். கொக்குவில் இந்துக் கல்லூரி

கவிதை
1ம் பரிசு -
ஜெ. டிலுக்சன்
தரம் 09
யா.். நெல்லியடி மத்திய கல்லூரி

2ம் பரிசு -
நே. ஆரணி
தரம் 09
யா.். வட்டு இந்துக் கல்லூரி

3ம் பரிசு -
க. சர்வேஷ்
யா.். இந்துக் கல்லூரி
தரம் 09

ஆறுதல் பரிசுகள்
அ. தரங்கினி
தரம் 08
யா.். இந்து மகளீர் கல்லூரி

பி. டீபிகா
தரம் 08
கொக்குவில் இந்துக் கல்லூரி

ச. தேவானந்
தரம் 09
யா.்.ஹாட்லி கல்லூரி

## கண்காணிக்கப்பட்ட பெண் பருந்தின் பயணம்

ஒரு பெண் பருந்து ஒன்று தென் ஆப்பிரிக்காவில் இருந்து பின்லாந்து வரை பறந்த போது இதனை GPS ஜிபிஎஸ் கண்காணிப்பான் மூலம் கண்காணிக்கப்பட்டது அது தினமும் சுமார் 230 கிமீ தூரம் கடந்து, ஆப்பிரிக்கா கண்டத்தில் நேராகப் பறந்து சென்றது. ஆனால், வடபகுதியில் உள்ள வறண்ட பாலைவனத்தை அடைந்ததும், அது அதன் திசையை மாற்றியது. பின்னர், சூடான் மற்றும் எகிப்தின் மீது நைல் நதியின் பாதையைப் பின்பற்றியது, ஆனால் மத்திய தரைக்கடல் மீது பறப்பதை தவிர்த்தது. அதற்கு பதிலாக, அது சிரியா மற்றும் லெபனான் வழியாகப் பறந்தது. கருங் கடலின் மீது பறப்பதைத் தவிர்த்தது, ஏனெனில் அந்த பருந்து தாகமாக இருந்தால், அங்கே தண்ணீர் குடிக்க முடியாது. அது தொடர்ந்து நேராகப் பறந்து, 42 நாட்களில் பின்லாந்தை அடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டது






# வானொலி தினம் உருவான கதை

சர்வதேச வானொலி தினம் ஆண்டுதோறும் பிப்ரவரி 13 அன்று உலகளாவிய அளவில் கொண்டாடப்படுகிறது. இந்த நாளின் முக்கிய நோக்கம், வானொலியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதும், அதன் மூலம் தகவல் பரிமாற்றத்தின் மகத்தான பங்களிப்பை சிறப்பித்தலும் ஆகும்.

## வானொலியின் வரலாற்றுப் பயணம்:

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பல ஆராய்ச்சியாளர்கள் வானொலியை உருவாக்க கடுமையாக உழைத்தனர். அவர்களில் முக்கியமானவர் இத்தாலிய அறிவியலாளர் குக்லியல்மோ மார்கோனி. 1895ஆம் ஆண்டு, மார்கோனி தனது இடைவிடாத முயற்சியின் மூலம், முதன்முதலாக தந்தி அலைகளை அனுப்பி, அதனைப் பெற்றுக்கொள்ளும் சாதனத்தை உருவாக்கினார். இது வானொலியின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

அதன்பின், 1919ஆம் ஆண்டு, அமெரிக்காவின் பிட்ட்ஸ்பர்க் நகரில் முதல் வானொலி நிலையம் நிறுவப்பட்டது. 1939ஆம் ஆண்டு, பண்பலை வானொலி (FM Radio) மக்களின் பயன்பாட்டிற்கு வந்தது. 1994ஆம் ஆண்டு, இணையத்தின் மூலம் 24 மணி நேரமும் வானொலி நிகழ்ச்சிகளை கேட்கும் வசதி அறிமுகமானது.




## சர்வதேச வானொலி தினத்தின் உருவாக்கம்:


2010ஆம் ஆண்டு, ஸ்பானிஷ் ரேடியோ அகாடமி, யுனெஸ்கோவிடம் வானொலியின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, ஒரு நாளை வானொலி தினமாகக் கொண்டாட வேண்டுமென கோரிக்கை

வைத்தது. இதனைத் தொடர்ந்து, 2011ஆம் ஆண்டு, யுனெஸ்கோவின் 36வது பொதுக்கூட்டத்தில், பிப்ரவரி 13ஆம் தேதி சர்வதேச வானொலி தினமாக அறிவிக்கப்பட்டது. இந்த தேதியின் முக்கியத்துவம், 1946ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகளின் சர்வதேச ஒலிபரப்பு சேவை (United Nations International Broadcasting Service) தொடங்கப்பட்டதிலிருந்து வருகிறது.

### வானொலியின் சமூகப் பங்களிப்பு:

வானொலி, தகவல் பரிமாற்றத்தின் ஒரு முக்கிய ஊடகமாக இருந்து, உலகின் பல பகுதிகளில் உள்ள மக்களுக்கு செய்தி, கல்வி, மற்றும் பொழுதுபோக்கை வழங்குகிறது. இன்றும், வானொலி தனது தனித்துவத்தால் மக்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச வானொலி தினம், வானொலியின் சமூகப் பங்களிப்பை நினைவுகூரும் நாளாகும். இந்த நாளில், வானொலியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மற்றும் விவாதங்கள் உலகளாவிய அளவில் நடத்தப்படுகின்றன.



# ஆச்சரியப்படுத்திய அறிவாலயத்தின் வருடாந்த கலை விழா




அறிவாலயம் ஆளுமை விருத்தியகம் தனது வருடாந்த கலை விழாவை 12.02.2025 புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு இளங்கலைஞர் மன்ற அரங்கில் சிறப்பாக நடத்தியது. இவ்விழாவில் சிறுவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.



சுழலும் சொற்போர் அனைவரையும் கவர்ந்தது. ”தனிமனித வாழ்வின் வெற்றியின் அடித்தளம்...?” என்ற தலைப்பில் சிறுவர்கள் தங்களது கருத்துக்களை சுழலும் முறையில் மாறி மாறி வாதிட்டு முன்வைத்தனர். திருவாளர் ஹர்சன் இந்நிகழ்வின் நடுவராக செயற்பட்டு சிறார்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்தார். இது பார்வையாளர்களின் சிந்தையைத் தூண்டும் வகையில் அமைந்தது.





”என்றும் வாழும் எங்கள் ஈழக் கவிஞர்” எனும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கம் ஈழத்துக் கவிஞர்களின் புகழைப் பாடியது. கவிஞர்கள் தங்களது கவிதைகளால் பார்வையாளர்களைக் கவர்ந்தனர். கவியரங்க நடுவராக திருவாளர் ஜீவா சஜீவன் அவர்கள் பங்குபற்றி மழலைகளின் கவித்துவத்தை பாராட்டி மகிழ்ந்தார்.

நடன நிகழ்வுகள் பார்வையாளர்களை பரவசப்படுத்தின. "இறைவனே அருள் செய்வாயே....", "அச்சமில்லை அச்சமில்லை...", "அதோ அந்தப் பறவை போல..." ஆகிய தலைப்புகளில் சிறுவர்கள் ஆடிய நடனங்கள் அனைவரையும் கவர்ந்தன. "நிமிர்வு தரும் நல்ல பாட்டு" எனும் குழுப் பாடல் முன்வைப்பு பார்வையாளர்களின் உணர்வுகளை எழுச்சியடையச் செய்தது.

இவ்விழா எங்கள் இளையவர்களின் ஆற்றல் அரங்கேறும் களமாக அமைந்தது. சிறுவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பார்வையாளர்கள் சிறுவர்களின் திறமைகளை கண்டு வியந்து பாராட்டினர். இவ்விழா இளையவர்களின் கலைத் திறனை வளர்ப்பதற்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கும் ஒரு சிறந்த தளமாக அமைந்தது.

## சிவபூமி திருக்குறள் வளாகத்திற்கு திருக்குறளின் மொழிபெயர்ப்பு நூல்களை இந்தியாவில் தேடி பெற்றுத் தந்த இளைஞன்

உலகத்தின் பொது மறையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட திருக்குறளுக்கு மரியாதை செய்யும் முகமாக யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் பகுதியில் திறந்து வைக்கப்பட்ட திருக்குறள் வளாகத்தின் திறப்பு விழாவில் தூமி அமையத்தின் இணை ஸ்தாபகர் திரு. வி. மகாசேனன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். அரசியல் ஆய்வு கட்டுரைகளை எழுதும் இவர் டில்லி பல்கலைக்கழகத்தில் தன் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டுள்ளார். செஞ்சொற் செல்வரின் அறிவுறுத்தலுக்கு அமைய 35 இற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட திருக்குறள் நூல்களை பல புத்தக கண்காட்சிகளுக்கு சென்று தேடிப் பெற்று இந்தியாவில் இருந்து கொண்டு வந்து திறப்புவிழாவிற்கு முதல்நாள் சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளார். ஆர்வம் மிக்க இந்த இளைஞனுக்கு விழா மேடையில் அவர் கற்ற பல்கலைக்கழக துணைவேந்தர் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார். இந்த நூல்களை நீங்கள் சிவபூமி திருக்குறள் வளாகம் சென்றால் வாசித்து பயன் பெறலாம்.



# நீண்ட வரலாறு கொண்டது தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை

8ம் கட்டை வைத்தியசாலை என்றும் கெங்கம்மா வைத்தியசாலை என்றும் நம் மூத்தோர்கள் இந்த வைத்தியசாலையை அழைப்பார்கள். தெல்லிப்பழையில் இயங்கி வரும் இந்த வைத்தியசாலை கடந்த மாதம் தனது புதிய கிளையை யாழ் நகரில் ஆரம்பித்து வைத்துள்ளது.




வியாபார நோக்கமற்ற ஏற்படும் செலவுகளை மட்டும் அறிவிடும் ஒரு கூட்டுறவு சேவையாக இந்த வைத்தியசாலை இயங்கி வருகிறது. மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணபவ உட்பட பல வைத்திய நிபுணர்கள் தினமும் இங்கு வந்து மிகக் குறைந்த கட்டணத்தில் தங்களது சேவைகளை வழங்கி வருகிறார்கள்.

கட்டணம் குறைவு என்பதால் சேவையின் தரம் குறைவு என்பது இதன் பொருள் அல்ல. இந்த வைத்தியசாலையின் அடிப்படை கொள்கையே கூட்டுறவிற்கான சேவை என்பதாகும். இந்த வைத்திய சாலையின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கவும் மேலும் பல புதிய சேவைகளை வழங்கவும், கொடையாளர்களிடம் உதவிகளை இந்த வைத்திய சாலை எதிர்பார்த்து நிற்கின்றது.






# மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் பாரதி இறைபதம் அடைந்தார்




மூத்த தமிழ்ப் பத்திரிகையாளரும் “ஞாயிறு தினக்குரல்“ முன்னாள் ஆசிரியருமான இராஜநாயகம் பாரதி அவர்களின் மறைவுச் செய்தி தமிழ் ஊடக உலகிற்கும் வாசகர்களுக்கும் பேரிழப்பாகும். சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத்துறையில் அனுபவமுள்ள அவர், “தினக்குரல்“ பத்திரிகையின் வாரமலர் மற்றும் இணையத்தளத்தின் முன்னாள் ஆசிரியராகவும், அண்மையில் “வீரகேசரி“ பத்திரிகையின் யாழ்ப்பாணப் பிராந்திய ஆசிரியராகவும் பணியாற்றினார்.

அவரது பங்களிப்புகள் தமிழ் பத்திரிகை உலகில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவரது மறைவு ஊடகத் துறையில் ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

# ஆட்டுக்குட்டிக்கு பாலூட்டும் நாய்

யாழ். தென்மராட்சி, எழுதுமட்டுவாள் கிராமத்தில் தாய்மைக்கு விலங்குகள் இல்லை என்பதை நிரூபிக்கும் நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்று அரங்கேறியுள்ளது. தாய் ஆடு குட்டி ஈன்ற பின்னர் உயிரிழக்க, ஆதரவின்றி தவித்த ஆட்டுக்குட்டிக்கு நாய் ஒன்று தனது கருணை உள்ளத்தால் பாலூட்டி வருகிறது.

அண்மையில் குட்டி ஈன்ற நாய், தாயை இழந்த ஆட்டுக்குட்டியின் பசியை தனது பாலூட்டி போக்கி வருகிறது. தாய்மைப் பாசத்திற்கு எல்லையில்லை என்பதை உணர்த்தும் இந்த சம்பவம் அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. சமூக வலைத்தளங்களில் இந்த புகைப்படங்கள் வைரலாக பரவி வருகின்றன. யாழ். மக்கள் இந்த நெகிழ்ச்சியான செயலைப் பாராட்டி வருகின்றனர்.



# 400 வருடங்கள் பழமைவாய்ந்த வட்டுக்கோட்டை துணைவி பிரகதீஸ்வரர் ஆலயம் புனரமைப்பு

400 வருடங்கள் பழமைவாய்ந்த வட்டுக்கோட்டை துணைவி பிரகதீஸ்வரர் ஆலயத்தினை மீள் உருவாக்கும் பணி (12.02.2025) ஆரம்பிக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் தற்போது அப் பணிகள் ஆரம்பமானது.

மிகத் தொன்மையான எமது முன்னோர்களின் வழிப்பாட்டுத் தலமான இவ்வாலயம் பல ஆண்டு காலம் கவனிப்பாரின்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள்உருவாக்கம் செய்வதற்கு நீண்ட காலம் முயற்சி எடுக்கப்பட்டது.
அமெரிக்காவில் வசிக்கும் கைதடியினைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதனின் மகள் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் இவ்வாலயத்தினை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதியுதவியினை வழங்கியுள்ளார்.

இவ்வாலயத்தை மீளுருவாக்கும் இந்த நிகழ்வில் மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் மரபுரிமை மையத்தின் உப தலைவர் சத்திர சிகிச்சைப் பேராசிரியர் ரவிராஜ், இவ்வாலயத்தினை மீள்உருவாக்கம் செய்வதற்குரிய நிதி உதவியினை வழங்கிய பாலயோகஸ்தினி சிவயோகநாதன் அவர்களின் தந்தை கலாநிதி சிவயோகநாதன், யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் செயலாளர் ரமேஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஸ் விரிவுரையாளர் ஜெயதீஸ்வரன் இவ்வாலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணியில் இருக்கும் கபிலன், செல்வி துஸ்யந்தி, மணிமாறன் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் பத்திராசிரியர் பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# சாதித்தவர்களை கௌரவிக்கும் முன்மாதிரி செயற்பாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் நடத்திய பொங்கல் விழாவில், பல துறைகளிலும் சிறந்து, ஈழத்தின் பெருமையை உயர்த்தியவர்களை 2025ம் ஆண்டின் சாதனையாளர்களாக கௌரவித்தது பாராட்டுக்குரிய செயற்பாடாகும். இவ்வாறு முன்னேறியவர்களைப் பாராட்டுவது, மற்றவர்களையும் தங்களின் திறமைகளை வெளிப்படுத்த ஊக்குவிக்கும். இத்தகைய முயற்சிகள், சமூகத்தில் முன்னேற்றத்திற்கும், ஒற்றுமைக்கும் வழிகாட்டும். இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற, அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.





# கடலில் வீசப்பட்ட முகக்கவசம்

கிரேக்க நாட்டின் கடலில் ஒரு வீசப்பட்ட face mask ஒன்றினை இழுத்துச் செல்லும் கடல்குதிரையே இது (seahorse) இதனை புகழ்பெற்ற கிரேக்க புகைப்படக் கலைஞர் நிக்கோலஸ் சமாரஸ் மூலம் புகைப்படமாக்கப்பட்டுள்ளது

மனிதர்களின் செயல்கள் கடல் வாழ்வினங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதற்கும், நமது கடல்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எவ்வளவு முக்கியமானது என்பதற்கும் ஒரு ஊக்குவிக்கும் நினைவூட்டலாக அமைகிறது இந்த புகைப்படம்



# சிவபூமி விருட்சம் வெளியிடப்பட்டது




சிவபூமியின் 25 வருட கால பணிகளின் சகல தகவல்களையும் உள்ளடக்கிய வெள்ளிவிழா சிறப்பு மலராகவும் சிவபூமியின் வெள்ளிவிழாப் பரிசாக தமிழ் சமூகத்திற்கு வழங்கப்பட்ட திருக்குறள் வளாகத்தின் கட்டட திறப்பு விழா சிறப்பு மலராகவும் சிவபூமி விருட்சம் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. சிவபூமி பத்திரிகை உதவி ஆசிரியரும் தூமி பத்திரிக்கை பிரதம ஆசிரியருமான திரு. ச. சந்தோஷன் வெளியிட பிரதம விருந்தினர் நீதியரசர் அரங்க. மகாதேவன் முதற்பிரதியை பெற்றுக் கொண்டார். சிவபூமி அறக்கட்டளையின் அசையும் அசையாத சொத்துக்கள் யாவும் இந்த நூலில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளதுடன் சிவபூமிக்கு அன்பளிப்புக்கள் தந்தவர் விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதோடு சிவபூமி அறக்கட்டளையின் எதிர்கால திட்டங்கள் பற்றிய தகவல்களும் மக்கள் பார்வைக்கு வழங்கப்பட்டுள்ளன.



# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# இசை ஆளுமை கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் இறையடி சேர்ந்தார்



இலங்கையின் இசை உலகில் ஒளிர்ந்த நகை, கலாசூரி, தேச நேத்ரு, கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள், 2025 பெப்ரவரி 17 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் காலமானார். அவரது மறைவு, நாட்டின் கலைத்துறைக்கு பேரிழப்பாகும்.

1946 ஜூன் 24 அன்று பிறந்த அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள், சிறந்த பாடகி, ஒலிபரப்பாளர், வீணை ஆசிரியர், மற்றும் நடன நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப்பாளர் எனப் பல்வேறு துறைகளில் திகழ்ந்தார். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் பணிப்பாளராகவும் பணியாற்றினார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கு தென்னிந்திய இசை, கர்நாடக சங்கீதம், மற்றும் நாட்டியம் போன்ற கலைகளைப் பல ஆண்டுகளாக கற்பித்து, ஆற்றல் மிகுந்த விரிவுரையாளராக விளங்கினார். அவரது பெயரால், பல்கலைக்கழகத்தின் கட்புல, கலை, நாட்டிய, சங்கீத பீடத்துக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது.



அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள், கலாசூரி, தேச நேத்ரு, இன்னிசைக் கலாநிதி, சங்கீத கலாநிதி, கலைச்செம்மல், இசைஞான கலாநிதி, விஸ்வப்பிரசாதினி, சங்கீத சிரோன்மணி போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார். சர்வதேச சாதனையாளர் வரலாற்று அகராதியின் 25 ஆவது பதிப்பில் அவரது பெயர் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவு, இலங்கையின் கலைத்துறையினருக்கு பேரிழப்பாகும். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ந.கோபிராம்.
உளவியல்துறை மாணவன்,
யாழ்பாணப் பல்கலைக்கழகம்.



# பாடசாலை மாணவர்களுக்கான ஆளுமை விருத்தி மேம்பாட்டு உத்திகள்

ஆளுமை என்பதை ஒருவரிடம் காணப்படும் உடற் கவர்ச்சியின் அளவு என்று பலர் எண்ணுகின்றனர். அத்துடன் பிறரை காட்டிலும் குறிப்பிட்ட ஒரு பண்பிலோ, திறனிலோ மிகச் சிறந்து விளங்குவதனை சிறந்த ஆளுமை உடையவன் அல்லது உடையவள் என்கின்றனர். ஆனால் ஆளுமை தனியே இவ்வாறு அமைவதில்லை. அது பரந்துபட்ட விளக்கத்தை தரக்கூடியது. பொதுவாக ஆளுமை என்பது ஒருவர் பெற்ற உடல், உள, சமூக பண்புகள், மனப்பான்மைகள், மனநிலைகள் எல்லாம் இணைந்தது ஆகும், இது ஒவ்வொரு தனிமனிதனிடமும் காணப்படுவதுடன் மக்களின் உறவுகள், சமுதாய குழுக்கள், சுற்றுச்சூழல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் போன்றவற்றின் ஊடாக தம்மை தேர்ச்சி அடைய செய்வதே கல்வியின் பிரதான நோக்காகும். இவர்களை சமூகத்தில் நல்ல ஆளுமை மிக்க நபராக உருவாக்குவதில் பாடசாலையின் பங்கு அளப்பரியது. பாடசாலை மாணவர்கள் எனும் போது அவர்கள் 5 முதல் 18 வயது வரை கல்வி கற்பவர்களாக காணப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி

நன்மைகளை ஏற்படுத்தினாலும் கூட சவால்களையும், போட்டி மிக்க நெருக்கடி சூழலையும் உருவாக்கி உள்ளது. இவ்வாறான நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஆளுமையை வளப்படுத்துவது அவசியம். பிரதானமாக பாடசாலை மாணவர்கள் ஆளுமையை உரிய முறையில் விருத்தி செய்து மேம்படுத்திக் கொள்வதன் ஊடாக பல சவால்களையும் எதிர்கொண்டு சாதிக்க வழிவகை செய்கின்றது.

அந்த வகையில் பாடசாலை மாணவர்களின் ஆளுமை (பண்புத்திறன்) விருத்தியை மேம்படுத்த உதவும் உத்திகளை நாம் பார்ப்போம்.

### சுய முன்னேற்றப் பயிற்சிகள்

மாணவர்களை சுயமாக கற்றலை (Self-directed learning) மேற்கொள்ள ஊக்குவித்தல் பிரதானமாகின்றது. பாடசாலைகளில் வகுப்பறை கல்வி நடவடிக்கையின் போது அது தவிர்ந்த பிற சூழல்களிலும் (வீடு, தனியார் கல்வி நிலையங்கள்) இவ் சுயகற்றல் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கின்றது. அத்துடன் தோல்விகள், தவறுகள் விடும் சந்தர்ப்பங்களில் அதிலிருந்து கற்றுக்கொள்ளும் மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளும் போது மாணவர்கள் தம் சுய நம்பிக்கை, சுயவிழிப்புணர்வு என்பன விருத்தி அடைந்து அவர்களின் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

### இணை பாடவிதான செயற்பாடுகள்

தனியே பாடத்துறை சார்ந்த கற்றலை மேற்கொள்வதினால் மட்டும் ஆளுமையை விருத்தி செய்ய முடியாது. இணைபாடத்தின் ஊடாக சமூக நடத்தை, பழக்கவழக்கங்கள் தெரிந்து கொள்வதுடன் சமூகத்திற்கு ஏற்ற வகையில் வழிப்படுத்த உதவுகின்றது. பாடசாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சி, விளையாட்டுப்போட்டி, சாரணர் இயக்கம் முதலானவற்றில் ஆர்வத்துடன் பங்கு பெறுதல் மற்றும் செயற்திட்டங்கள் (கண்காட்சி, சிரமதானம், சுற்றுலா) பங்குபற்றுவதன் ஊடாக புதிய அனுபவங்கள், உற்சாகம், பொருந்தி வாழும் தன்மை, சேர்ந்து இயங்கும் தன்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை, தலைமைத்துவ பண்பு என்பன ஏற்படுகின்றது. பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் (இலக்கிய போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், வினாடி வினாப் போட்டிகள், கலைப் போட்டிகள், பட்டிமன்றங்கள்) முதலானவற்றில் ஈடுபடுவதன் ஊடாக ஆளுமை விருத்தி மேம்பாடு அடைகின்றது.



### நல்ல உறவுகளை உருவாக்குதல்

மாணவர்களுக்கு நல்ல நட்புகளை உருவாக்கி, அவற்றை கையாள கற்றுக்கொடுக்க வேண்டும். நல்ல நட்பானது சீரான வழிகாட்டலுக்கும், வெற்றிக்கும் உறுதுணையாகி அமைவது மட்டுமல்லாது பிரச்சனைகள் அல்லது தடைகள் நோக்கி செல்லாது நேர்வழியிலே செல்ல வழிகாட்டுகின்றது. மற்றும் உள்ளூர், சர்வதேச மாணவர்களுடன் பரஸ்பர கலந்துரையாடல்களை (Exchange Programs) ஊக்குவிப்பதன் ஊடாகவே மொழி பரிமாற்றம், தொடர்பாடல் விருத்தி, கலாச்சார விருத்தி ஏற்படுவதுடன் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

### நெறிப்படுத்தல் நடவடிக்கை

நேரம் எம் வாழ்வில் மிக முக்கியமாகின்றது. நேர மேலாண்மை (Time management) சரியாக பேணுவதன் ஊடாக பல விடயங்களை சரிவரச் செய்யவும், பல இன்னல்களை தவிர்க்கவும் உதவுகின்றது. நேர மேலாண்மையானது அன்றாட செயல்பாடுகளுக்கு நன்றாகவே உதவுகின்றது. எம் வாழ்வின் இலக்கை நிர்ணயித்து நடைமுறைப்படுத்துவதிலும் இதன்பங்கு அளப்பரியது.

### தொழில்நுட்ப வளர்ச்சி

ஆரம்பத்தில் கூறியது போல இன்றைய உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி தடுக்க முடியாதாகிவிட்டது. இவ்வாறான போட்டி உலகில் எமக்கு இவை பற்றிய அறிவை மேம்படுத்தும் போது ஆளுமை நன்றாவே விருத்தியடைந்து செப்பனிடப் படுகின்றது. Computer Skills, Online Tolls பயன்பாடு, தொழில்நுட்ப கற்றல் முறைகள் (E-learning Platforms) கையாள்வதல், AI [Aritificial intelligence] பற்றிய அறிவு என்பன முக்கியமாகின்றன.

### சமூக தொடர்பு திறன் மேம்பாடு

மாணவர்களுக்கு மக்களுடன் நெருங்கி இடைவினை (தொடர்பு) கொள்ளும் நிலை தற்போது உலகில் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆளுமை பாதிப்படையும். அதனால் மக்களுடன் நெருங்கிப்பழகி (Inter Personal Skills) மற்றும் (Communication Skills) உரையாடல் திறன், நம்பகத்தன்மை (Assertiveness), முறைசார் உரையாடல் (Formal Commuication) ஏற்படுத்திக் கொள்வதின் ஊடாக ஆளுமை விருத்தி மேம்படுகின்றது.

### உளநல மேம்பாடு (மனநல மேம்பாடு)

தவறான உந்துதல்கள் மற்றும் தூண்டல்கள், தீய பழக்க வழக்கங்களை பின்பற்றுவதை



தவிர்த்தல், சரியான மனவளர்ச்சியை கையாளுதல், அதாவது சூழ்நிலைக்கேற்ப உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்தல். இதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை உளவளத்துணையாளரின் வழிகாட்டல் சிறந்தது. அத்துடன் பாரபட்சம், மூடநம்பிக்கைகளை தவிர்த்து அனைவரிடமும் அன்பு, நட்புடன் பழகுவதன் ஊடாக உளநலம் மேம்படுவதுடன் ஆளுமை விருத்தியும் அதிகரிக்கின்றது.

### தன்னம்பிக்கையை வளர்த்தல்

பாடசாலைகளில் மாணவர்களின் திறன்களை பாராட்டுதல் மற்றும் ஊக்கப்படுத்தலின் மூலமாக தன்னம்பிக்கை வளர்கின்றது. மாணவர்கள் பங்கு பெறும் சிறு சிறு போட்டிகள், ஏன் நல்ல செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களிலும் வாழ்த்துதல், கைதட்டுதல், புகழ்தல் என்பன மூலம் அவர்களின் தன்னம்பிக்கையை மேலும் அதிகரிக்க முடியும்.

### பரிந்துரைகள், வழிகாட்டல்

முதியோர்களிடமிருந்து மற்றும் ஆசிரியர்களிடமிருந்து அவர்களின் கருத்துக்கள் மற்றும் வழி காட்டல்களை மதித்து நடப்பது நல்லது. அது மட்டுமல்லாது வல்லுனர் பேச்சுகள் (Expert Talks) மற்றும் தொழில் முனைவோர்களின் சந்திப்புகள் முதலானவற்றில் பங்கு கொள்வதன் மூலம் ஆளுமை மேம்படுகின்றது.

### ஆரோக்கியமான வாழ்க்கை முறை வழிகாட்டல்

உடல் நலம், உள நலத்தை பேணும் பழக்கவழக்கங்களினை (Healthy Habits) கற்பது சிறந்தது. தினசரி உடற்பயிற்சி செய்தல் மற்றும் யோகாசனம், தியானம், இஷ்ட தெய்வ வழிபாடுகள், இனிய இசை கேட்டல் என்பன மனதை ஒருநிலைப்படுத்த உதவுகின்றது. மனஅழுத்தத்தை (Stress) குறைக்கவும் இவை உதவுகின்றது.

### திறன் வளர்ச்சி நடவடிக்கைகள்

குழுவேலை (Team Work) மூலம் தலைமைத்துவம் (LearderShip) மற்றும் ஒத்துழைப்புத் திறன் வளர்கின்றது. குழுச்செயற்பாட்டின் போது ஒற்றுமை, விட்டுக் கொடுப்புடன் பொறுப்புணர்வும் ஏற்படுகின்றது. தனிநபர் மற்றும் குழு அடிப்படையிலான திறன் பேச்சு (Pubilc Speaking); மற்றும் சிந்தனையாழ்வு (Critical Thinking) பயிற்சிகளை அதிகம் கற்றுக் கொள்வதன் ஊடாக ஆளுமை விருத்தி நன்றாகவே மேம்பாடு அடைகின்றது.



**உதவும் திறன் வளர்ப்பு**

முதலில் தனக்குத்தானே உதவும் திறன் உடையவராக இருத்தல் வேண்டும். தன்னை செயற்படுத்தல், கட்டுப்படுத்தல் மட்டுமன்றி தனக்குத்தானே உதவுபவராக காணப்படுதல் நன்று. அத்துடன் வகுப்பறை குழுச்செயற்பாடுகளில் மாணவர்களை தமக்குத் தாமே உதவும் குழுவுடன் இணைத்தல் மூலம் இவர்களிடம் இப்பண்பு வளர்கின்றது. இதனால் ஆளுமை விருத்தி அடைகின்றது.

இவ்வாறான பல்வேறுபட்ட உத்திகளின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களின் மத்தியில் ஆளுமை விருத்தி அடைந்து சமூகத்தில் ஆளுமை மிக்க நபராக திகழ வழிவகை செய்கின்றது.

# இணுவில் கந்தசுவாமி ஆலய உலகப்பெருமஞ்சம் தைப்பூசத் திருநாளில் புதுப்பொலிவுடன் பவனி



இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள இணுவில் கந்தசுவாமி ஆலயம், பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாகும். இவ்வாலயத்தின் உலகப்பெருமஞ்சம், பல கலை வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் உலகப்பெருமஞ்சம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இது, தைப்பூசத் திருநாளின் போது வீதி உலா வரும்.

சுமார் 1 1/2 கோடி ரூபா நிதி மதிப்பீட்டில் நீண்ட காலத்திற்கு பிறகு இந்த வருடம் புதிதாக வர்ணம் தீட்டப்பட்டு திருத்த வேலைகள் செய்யப்பட்ட இந்த உலகப்பெருமஞ்சம், தைப்பூசத் திருநாளில் கம்பீரமாக பவனி வந்து பக்தர்களுக்கு கண்கொள்ளாக் காட்சி அளித்தது. இதன் போது பக்தர்கள் பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர்.

இணுவில் கந்தசுவாமி ஆலய உலகப்பெருமஞ்சம், ஈழத்தின் அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இது, பல தலைமுறைகளாக பக்தர்களின் நம்பிக்கையையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கிறது. புதுப்பிக்கப்பட்ட பெருமஞ்சம், ஆலயத்தின் சிறப்பை மேலும் உயர்த்தியுள்ளது.

# தொழிலதிபர் எஸ்.பி. சாமி இயற்கை எய்தினார்.

தினக்குரல் பத்திரிகை மற்றும் நோர்தேன் சென்றல் வைத்தியசாலையின் ஸ்தாபகரும் தலைவருமான எஸ். பி. சாமி அவர்கள் தனது 89 ஆவது வயதில் 18.02.2025 மாலை காலமானார்.

1936 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி யாழ்ப்பாணம், வேலணை பகுதியில் பிறந்த செல்லையா பொன்னுசாமி அவர்கள், சமூக சேவையிலும் வர்த்தகத்துறையிலும் சிறந்து விளங்கினார். கொழும்பில் அத்தியாவசிய பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி சங்கத்தின் தலைவராகவும், கொழும்பு புறக்கோட்டை வர்த்தக சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

1978 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் சென்றல் நேசிங் ஹோம் தனியார் வைத்தியசாலையை நிறுவி, பின்னர் அதனை நோர்தேன் சென்றல் வைத்தியசாலையாக மேம்படுத்தினார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்ட அவர், 1997 ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகையை நிறுவி, தமிழ் பத்திரிகை வரலாற்றில் முக்கியமான பங்காற்றினார்.

போருக்குப் பின்னர், யாழ் தினக்குரல் பத்திரிகையை நிறுவி, வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் துயரங்களை வெளிப்படுத்தினார். கருணைப்பாலம் அமைப்பின் மூலம், வன்னியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவினார்.

திரைப்படத்துறையிலும் முன்னோடியாக இருந்த எஸ். பி. சாமி அவர்கள், 1990களில் மூன்று சிங்களத் திரைப்படங்களை தயாரித்து, பிரபலமாக்கினார். வேலணை முத்துமாரி அம்மன் ஆலய அறங்காவலர் சபை தலைவராக இருந்தபோது, இராஜகோபுர வேலைப்பாடுகளில் முக்கிய பங்காற்றினார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



# அவுஸ்திரேலியாவை வெள்ளையடித்த இலங்கை அணியின் இளம் சிங்கங்கள்




இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஒருநாள் தொடர், இலங்கை அணியின் திறமையையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்தியது. தொடரின் முதல் போட்டியிலேயே இலங்கை அணி கடினமான நிலைமையில் இருந்து மீண்டு, ஆஸ்திரேலியாவை தோற்கடித்து சிறந்த தொடக்கத்தை ஏற்படுத்தியது.

முதலாவது போட்டியில், இலங்கை அணியின் டாப் ஆர்டர் தோல்வியடைந்தபோதும், கேப்டன் சரித் அசலங்கா தனியாக போராடி 126 பந்துகளில் 127 ரன்கள் எடுத்து அணியை 214 ரன்னுக்கு கொண்டு சென்றார். இந்த இலக்கை நோக்கி விளையாடிய ஆஸ்திரேலியாவை இலங்கை பந்துவீச்சாளர்கள் கட்டுப்படுத்தினர். அஷிதா பெர்னாடோ தொடக்கத்திலேயே அதிரடியாக இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றி ஆஸ்திரேலிய அணிக்கு அதிர்ச்சி அளித்தார். பின்னர், தீக்சனா தனது சூழ்ச்சியான ஸ்பின்னால் 4 விக்கெட்டுகள் வீழ்த்தி ஆஸ்திரேலிய அணியை 165 ரன்களுக்கு சுருண்டார்.

இரண்டாவது போட்டியில், இலங்கை அணி சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தியது. குசால் மெண்டிஸ் 101 ரன்கள், கேப்டன் அசலங்கா 78ழூ ரன்கள் எடுத்து, இலங்கை 281

ரன்கள் என்ற வலுவான இலக்கை நிர்ணயித்தது. பந்துவீச்சில் வெல்லாலகே 4 விக்கெட்டுகள் மற்றும் அஷிதா பெர்னாடோ 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதால், ஆஸ்திரேலியா வெறும் 107 ரன்னில் அகப்பட்டு 174 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.



இந்த தொடரின் வெற்றிகள் இலங்கை அணிக்கு முக்கியமான முன்னேற்றத்தை அளிக்கின்றன. அணியின் தன்னம்பிக்கை அதிகரிக்க, வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த, மற்றும் சரியான பயிற்சி முறையை பின்பற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. குறிப்பாக, தமது சொந்த மண்ணில் விளையாடும் அணிகளுக்கு சாதகமான பீச்சுகளை உருவாக்குவது தவறாகக் கருதப்படக்கூடாது. இதுவே ஒரு அணிக்கு வெற்றியளித்து, அவர்களது திறமையை வெளிநாடுகளிலும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

இலங்கை அணியில் தற்போது பல்வேறு திறமையான பந்து வீச்சாளர்கள் உள்ளனர். வேகப்பந்து மற்றும் ஸ்பின் சமநிலையில் இருப்பதால் எதிர்பார்க்கும் விதத்தில் எதிரணி அணிகளை அழுத்தமளிக்க முடிகிறது. அணியின் வெற்றி கலாச்சாரம் தொடர்ந்து வளர்ந்தால், எதிர்காலத்தில் வெளிநாடுகளில் கூட நல்ல விளையாட்டை வெளிப்படுத்த முடியும்.

இந்த தொடரின் முடிவுகள், இலங்கை அணியின் வளர்ச்சியையும், சரியான திசையில் பயணிப்பதையும் உறுதிப்படுத்துகின்றன. அணியின் ஒற்றுமை மற்றும் புதிய வீரர்களின் திறமை வெளிப்படுவதை தொடர்ந்து, இலங்கை கிரிக்கெட் மீண்டும் தனது பழைய மகிமையை பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

